**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.352/2022**
**Deposition of witness of Plaintiff – P.W.1(பிச்சை)**
**06.10.2025**

**3ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. இறந்துபோன பிச்சை என்பவருக்கு 1ஆம் பிரதிவாதி பழனி மட்டுமே வாரிசு என வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதியின் மூத்த சகோதரர் பிச்சை திருமணம் செய்து கொள்ளாமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, 2 திருமணம் செய்துள்ளார்.

2. அ.வ.எண்.102/2012ல் இறந்துபோன பிச்சைக்கு 1ஆம் பிரதிவாதி மட்டுமே வாரிசு என தீர்ப்பு பெற்றுள்ளார் என்றால் அது பொய் தீர்ப்பாகும். அந்த தீர்ப்பின் அடிப்படையில் சர்வே எண்கள் 125/2எ, 2பி சொத்துக்களை பொறுத்து ஆவண எண்கள் 1011/2013 மற்றும் 1284/2015 ஆகிய பொது அதிகார ஆவணங்களை 2ஆம் பிரதிவாதிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

3. வழக்கு 3ஆம் பிரதிவாதி 2ஆம் பிரதிவாதியிடம் இருந்து 3 1/4 சென்ட் மட்டுமே எழுதி வாங்கியுள்ளார் என்றால் அது எனது இடமாகும். 17.05.2018ஆம் தேதி 4ஆம் பிரதிவாதியிடம் பட்டா மாறுதலுக்காக 3ஆம் பிரதிவாதி மனு தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் 29.05.2018ஆம் தேதி அரசு வழக்கறிஞர் சட்ட கருத்துரை வழங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த அடிப்படையில் தான் 23.08.2018ஆம் தேதி பட்டா எண் 2937 என பட்டா மாற்றி கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. தாவா சொத்தின் வழியாக விளாப்பட்டிக்கு ரோட்டில் இருந்து வண்டிப்பாதை இருந்தது என்றால் இல்லை. தாவா சொத்துக்களை பொறுத்து நான் கேட்டுள்ள

உரிமை விளம்புகை மற்றும் செயலுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. அரசு தரப்பில் யார் யாரை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் வட்டாட்சியர், சார்பதிவாளர் மற்றும் மாவட்ட ஆட்சியரை சேர்த்துள்ளேன். அரசுக்கு எதிராக என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் என்னுடைய இடத்தை பொறுத்து பட்டா போட்டுள்ளார்கள். அது சம்மந்தமாக பரிகாரம் கேட்டுள்ளேன்.

2. தாவா சொத்திற்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் எனது அப்பா பெயர், எனது பெயர் மற்றும் எனது தம்பி பெயரில் உள்ளது.

3. தாவா சொத்திற்கு பட்டா 3ஆம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றும், எங்கள் பெயரில் உள்ளது என தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4. நான் குடும்ப கர்த்தா என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பட்டாவை ரத்து செய்யும் அதிகாரம் உள்ள வருவாய் கோட்டாட்சியரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

5. பட்டாவை ரத்து செய்ய கோரி வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. 5ஆம் பிரதிவாதியின் மேல் அதிகாரியான மாவட்ட பதிவாளரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

7. 5ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் நான் எவ்வித தடங்கல் மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் பத்திரம் பதிவு செய்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி பத்திரங்கள் செல்லாது என வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

8. தாவா சொத்திற்கு தற்போது வரை 3ஆம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா இருந்து வருகிறது என்றும், அதற்கு மாறாக எங்கள் பெயரில் பட்டா உள்ளதாக சொல்லி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்தை பொறுத்து 4ஆம் பிரதிவாதியால் முறையாக விசாரணை செய்யப்பட்டு அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை பெற்று அதனடிப்படையில் தான் 3ஆம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. மூல ஆவணங்கள் மற்றும் வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்துதான் 5ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் அவை மோசடியான பத்திரங்கள் என வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

11. தாவா சொத்துக்களை பொறுத்து 2015ஆம் ஆண்டே பத்திரங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் நான் காலம் கடந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் எனது வழக்கு காலாவதிதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

12. தேவையுள்ள தரப்பினரை சேர்க்காத தோசத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

13. 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றும், அவர்களை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.